# மாவத்தகம பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மாவத்தகம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவத்தகம பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மத்திய சுற்றாடல் அதிகார சபையில் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் பிளிசறு தேறிய கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டக் கட்டிட நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 20% ஆன முற்பணமாகக் கிடைத்த ரூபா 1,214,031 தொகை மீளாய்வாண்டில்

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதி கடன் கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மகநெகும செயற்திட்டத்தின் கீழ் 2 நிர்மாணங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 997,198 தொகை மற்றும் கமநெகும 12 தொடர் வேலைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 4,296,696 தொகை என்பன மீளாய்வாண்டின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 10,016,329 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,416,591 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 621,830 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 2 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 185,000 தொகையும், 4 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக சபைக்குக் கிடைத்த ரூபா 190,000 தொகையும், 5 சந்தர்ப்பங்களில் சம்பளமாகச் செலுத்த வேண்டிய ரூபா 48,090 தொகையும் உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் பாராமரிக்கப்பட்டு வந்த நீர்ப்பிரிவு 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு

கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது வரையில் 5 கணக்கு விடயங்களின் கீழ் கிடைக்க வேண்டிய ரூபா 1,119,540 தொகையும், 3 கணக்கு விடயங்களின் கீழ் செலுத்த வேண்டிய ரூபா 800,436 தொகையும் தீர்க்கப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே நீர்ப்பிரிவிற்குரிய 5 வகையான வைப்புக்களின் கீழ் காணப்பட்ட ரூபா 5,182,440 தொகையான வைப்பு மீதி நீண்ட காலமாகக் காணப்படுவதுடன் அந்த மீதிகளையும் தீர்த்து வைக்காமல் மீளாய்வாண்டின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 4 கணக்கு விடயங்களின் கீழ் நீண்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 1,928,297 தொகையான வரவு மீதியும், 3 கணக்கு விடயங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 19,855 தொகையான செலவு மீதியும் தீர்க்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியிலும் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

(ஈ) சபையினால் பேணப்பட்டு வந்த கொங்கிரீட் செயற்திட்டம் 3 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 17,292 தொகையான கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் இருப்பாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 282,239 தொகையினுள் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 74,568 தொகை நீர் வேலைகளுக்கான களஞ்சிய இருப்பாகவும் ரூபா 31,428 பெறுமதியான பூர்த்தி செய்யப்பட்ட கொங்கிரீட் இருப்பு மீதியும் உள்ளடங்கியிருந்தது. அபிவிருத்திச் சபை காணப்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற செயற்பாடற்ற 4 வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 48,455 தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 02 வங்கிக் கணக்குகளிலிருந்து வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 242,822 பெறுமதியான 43 காசோலைகள் காணப்பட்டன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,734 | 1,442 | 4,197 |
| (ii) | வாடகை | 3,181 | 3,380 | 1,503 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,000 | 924 | 94 |
| (iv) | ஏனைய வருமானம் | 57 | 47 | 1,052 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,061,850 ஆகும்.

### 2.3.3 கடை வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 545,246 தொகையான கடை வாடகை நிலுவையாகக் காணப்பட்டது. அதன் மீதியில் மாதாந்த வாடகை ரூபா 92 தொகையான 5 நடைபாதைக் கடைகளுக்காக 1 வருடத்திற்கும் 10 வருடத்திற்கும் இடையிலான கால இடைவெளியில் ரூபா 25,396 நிலுவை மற்றும் பொதுச் சந்தைகளில் 42 கடைகளில் 17 இற்கு 9 மாதத்திற்கும் 4 வருடங்களுக்கும் இடையிலான கால இடைவெளியில் ரூபா 375,967 தொகையான நிலுவை தொடர்பாகவும் சபையின் 9 சொத்துக்களில் 1982 – 1986 காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 30,313 தொகையான நிலுவை அறவீடு தொடர்பாகவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆகக் குறைந்த கேள்வியான ரூபா 18,341 தொகையான சபைக்குரிய 14 சொத்துக்கள் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் வாடிக்கையாளர்கள் முன்வராமையின் காரணமாக வாடகைக்கு விட முடியாதிருந்ததுடன் சொத்து வருமானப் பதிவேட்டில் 1987 தொடக்கம் கொண்டுவரப்படுகின்ற ரூபா 397,051 தொகையான நிலுவை தொடர்பாக உரிய விபரங்களை இனங்காண

முடியாதிருந்ததுடன் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 கடை வாடகை**

சினிமா அரங்குகளிலிருந்து 1989 ஆம் ஆண்டு தொடக்கம் வாடகையாக ரூபா 1,008,967 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**2.3.5 பஸ்தரிப்பிடக் கட்டணம்**

2004 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற பஸ் நிலையக் கட்டணமாக ரூபா 54,940 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**2.3.6 வாடகை அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 84,500 தொகையான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை காணப்பட்டதுடன் இது சில வருடங்களுக்கு முன்பிருந்து பாதிடப்பட்ட வியாபார அனுமதிப்பத்திர வருமானமாக பட்டியலிடப்பட்டமையால் எழுந்த நிலுவையாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

**2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

நீண்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 28,040 தொகையான கொங்கீறிற் மூலப் பொருள் இருப்பு மீதி முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு இல 79 இன் மூலம் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் மாவத்தகம ரைஸ்டார் ஆடைத் தொழிற்சாலை என்ற பெயரில் தனியார் நிறுவனமொன்றினால் கூறுகளாக்கப்பட்டு விற்பனை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2003 நவம்பர் 28 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட உப விதி 16(1) பிரிவின் பிரகாரம் வடமேல் மாகாணத்தின் நிருவாகப் பிரதேச எல்லையில் வீடு மற்றும் ஆதன அபிவிருத்தி மற்றும் காணி கூறிடும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் வடமேல் மாகாண சபையில் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சபைக்கு அறவிட வேண்டிய வாடகைப் பணத்தில் ரூபா 200,500 அளவானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிட வேண்டி இருந்தது.

"நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நீதி மன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக" தலைவர் 2012 சனவரி மாதத்தின் போது எனக்கு அறிக்கையிட்டிருந்தார்.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு வரையில் சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமையாற்றியிருந்தார். சபையின் அங்கீகரிக்கப்பட்ட 2 நூலகர் பதவிகள் மீளாய்வாண்டிள் இறுதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட நூலகர் உதவியாளர்களின் எண்ணிக்கை 2 ஆக இருந்த போதிலும் 7 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதி வரையில் 8 பல்வேறு பதவிப் பெயர்களின் கீழ் 12 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 4 ஊழியர்கள் சேர்க்கப்பட்ட பதவிகளுக்குப் புறம்பான வேறு பதவிகளின் கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) தொழிலாளர், காவலாளி, சாரதி போன்ற பதவிப் பெயர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அளவு 36 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 31 பேர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும் சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தும் அடிப்படையில் அப்பதவிப் பெயருக்காக 21 பேர் அமைய / நாட்கூலி அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரை சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) சபையினால் சம்பளம் செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 52 நாட் கூலி ஊழியர்களில் 15 பேருக்கு நியமனக் கடிதங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. வீதித் தொழிலாளர்களின் மேற்பார்வை மற்றும் 2 பஸ் நிலைய பொறுப்பாளர் பதவிகளுக்காக 3 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த 2 பதவிகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. தகனக் கூட செயற்படுத்துனர் மற்றும் தகனக் கூட தொழிலாளர் பதவிகள் என்பன மீளாய்வாண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் உரிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் எதுவும் மேற்கொள்ளப்படாது இரண்டு தொழிலாளர்களின் ஊடாக இச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

## 2.7 ஊழியர் கடன்

வீதித் தொழிலாளியாக சேவையாற்றி 2008 ஆம் ஆண்டின் போது மரணித்த ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 13,380 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. சபையில் சேவை ஈடுபட்டிருக்கின்ற நாளாந்த பதவியினரில் 19 பேருக்கு 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் தொகைகளில் ரூபா 38,687 தொகை அவர்கள் சேவைக்கு சமூகமளிக்காமையின் காரணமாக அறவீடு செய்ய முடியாதிருந்தது. சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட நீர்த் திட்டம் மீளாய்வாண்டின் போது உரிய உத்தியோகத்தர்களுடன் நீர் வழங்கல் சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் நீர்ப் பிரிவில் இரண்டு ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 93,750 தொகையான கடன் மீது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,134,064 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2010 யூன் 28 ஆந் திகதி நடைபெற்ற உடைந்த பொருட்களின் ஏல விற்பனைக்காக 71 பொருள் வகைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 8 பொருள் வகைகளின் கீழ் 57 அலகுகள் ஏலத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இப் பொருட்கள் களஞ்சியத்தில் காணப்படாது இருந்ததுடன் அந்த பொருட்களின் பெறுமதிகளையும் இனங்காண முடியாதிருந்தது. ‘‘உள்ளூராட்சி ஆணையாளரினால் இங்கே குறிப்பிடப்பட்ட ரூபா 39,660 பெறுமதியான சீமெந்துக் கல் இயந்திரம் தொடர்பாக மாத்திரம் பரிசோதனை ஒன்று செய்யப்பட்டதாக’’ தலைவர் 2012 சனவரி மாதத்தின் போது எனக்கு அறிவித்திருந்தார்.

(இ) சபைக்குச் சொந்தமான கப் வாகனம் 1995 ஆம் ஆண்டின் போது இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டு 2006 செப்தெம்பர் 20 ஆந் திகதி சபைக்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்தது. வட மேல் மாகாண உள்ளூராட்சி

ஆணையாளரின் 2007 மே 07 ஆந் திகதிய 12/1/பா/ பொது 2007 ஆம் இலக்க கடிதத்தில் இந்த வாகனத்தின் பெறுமதி ரூபா 115,000 இற்கு மதிப்பிடப்பட்டு வாகனத்தின் உரிமையை மாற்றுவதற்காக பிரதம செயலாளரினால் 2007 திசெம்பர் 13 இவ் சபைக்கு அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிமையை சபைக்கு கையளித்து ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்காமல் பாதுகாப்பற்ற முறையில் சபையில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத்திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்